**செ.வெ.எண்.57/மே / 2026** **நாள்:30.05.2026**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாவட்டம் முழுவதும் நடத்திய சோதனைகளின் போது "கால்சியம் கார்பைட்" மற்றும் அனுமதிக்கப்படாத பிற பழுக்க வைக்கும் காரணிகளின் சட்டவிரோத பயன்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு.**

---

உணவு பாதுகாப்பு ஆணையரின் சிறப்புச் செயல்பாடு (Special Drive) ஆணை ஆகியவற்றின் தொடர்ச்சியாக, பழங்களை செயற்கையாகப் பழுக்க வைப்பதற்கு "கால்சியம் கார்பைட்" பயன்படுத்துவது, உணவு பாதுகாப்பு தரநிலைகள் (விற்பனை மீதான தடை மற்றும் கட்டுப்பாடுகள்) விதிமுறைகள், 2011-ன் விதிமுறை 2.3.5-ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாவட்டம் முழுவதும் நடத்திய சோதனைகளின் போது "கால்சியம் கார்பைட்" மற்றும் அனுமதிக்கப்படாத பிற பழுக்க வைக்கும் காரணிகளின் சட்டவிரோத பயன்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கில், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

பழசந்தைகள்/ மண்டிகள், சேமிப்புக் கிடங்குகள், மொத்த விற்பனையாளர்களின் வளாகங்கள், விநியோக நிறுவனங்கள் மற்றும் பருவகால பழங்கள் சேமிக்கப்படும் குளிர்பதன இடங்கள் "கால்சியம் கார்பைட்" பயன்படுத்துவதாக சந்தேகிக்கப்படும் இடங்களிலும் தீவிர கண்காணிப்பும் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அமலாக்க நடவடிக்கையின் போது வியாபாரிகள் மற்றும் இதில் தொடர்புடைய வணிக நிறுவனங்களிலும் சோதனையின்போது 30கிலோ அளவிலான கெட்டுப்போன மாம்பழங்களும் இதர பழங்களும் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட உணவு வணிக நிறுவனங்களின் மீது அபராதம் விதிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்ட மொத்தம் 155 கடைகளில், 5 கடைகள் நிர்ணயிக்கப்பட்ட உணவு பாதுகாப்பு தரங்கள் மற்றும் விதிமுறைகளை கடைபிடிக்காத நிலையில் செயல்பட்டது கண்டறியப்பட்டது.

மேலும், எத்திலீன் சார்ந்த பழுக்க வைக்கும் உணவு பொருட்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வரம்புகள் குறித்தும், விதிமுறைகளை கடைபிடிப்பதை உறுதி செய்வதற்காக பின்பற்ற வேண்டியவை மற்றும் தவிர்க்க வேண்டியவை குறித்தும் வியபாரிகளுக்கு விளக்கப்பட்டது. ரசாயானப் பொருள்களை தவறாக பயன்படுத்துவது பொது சுகாதாரத்திற்கு ஆபத்து விளைவிக்கும் என்றும், மேலும் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இத்தகைய அமலாக்க சோதனைகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து மாவட்டத்தில் நடைபெறும் என்றும் மாவட்ட நியமன அலுவலர் மரு.ஆ.ஜெகதீஸ் சந்திர போஸ் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**